**Deposition of witness**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**In the court of Judicial Magistrate No.II,Tindivanam.**

**CCIW.CASE NO. CC20/2011**

**Prosecution witness – PW – 4**

| | | | |
|---|---|---|---|
| Date | 23.01.2026 | Calling | |
| Name | ஆரோக்கியராஜ் | Religion | |
| Father/Husband Name | சாலமோன் | Age | 63 |
| Village/City | திண்டிவனம் | Caste. | |

**A2,A3,A5 to A7, A10 present. A11, A13, A15 absent. 317 Petition filed and allowed.**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு **17-**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**.**

1. இனம் 8-ல் 327 அங்கத்தினர் கடன் பெறவில்லை என்று மறுக்கப்பட்ட கடன்கள் என்றால் சரிதான். மேற்படி 327 அங்கத்தினர்களில் எத்தனை நபர்களுக்கு அழைப்பானை அனுப்பி வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் 137 நபர்கள் ஆகும். 327 கடன்களில் 126 கடன்கள் தனி அலுவலர் காலத்திற்கு முன்பு வழங்கப்பட்ட கடன்கள் என்றால் சரிதான். தனி அலுவலர் காலத்திற்கு முன்பு வழங்கப்பட்ட கடன்களுக்கு தனி அலுவலர் பொறுப்பேற்க முடியாது என்றால் சரியல்ல. தனி அலுவலர் பிரம்மதேசம் கூட்டுறவு வேளாண்மை சங்கத்தில் 2004 முதல் 2005 காலகட்டத்தில் தான் பணி புரிந்தார் என்றாலும் அதற்கு முன்பு வழங்கப்பட்ட கடன்களுக்கு அவர் பொறுப்பாக மாட்டார் என்றாலும் சரியல்ல. 327 கடன்களில் 18.11.2004-ல் 90 கடன்கள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) வசூல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதை நான் மறைத்து எனது அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. மேற்படி 327 கடன்களும் 100 சதவீத பயிர் கடன் சரி பார்ப்பு குழுவையோ, ஜாமீன்தாரையோ விசாரித்து முடிவு செய்யாமல் தன்னிச்சையாக நான் அறிக்கை சமர்ப்பித்துள்ளேன் என்றால் ஆவணங்கள் அடிப்படையில் குழு

அறிக்கையின் அடிப்படையிலும் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். எந்தக் குழுவின் அறிக்கை என்றால் 100% பயிர் சரிபார்ப்பு குழு ஆகும்.

2. 100% பயிர் கடன் சரி பார்ப்பு குழு முன்னிலையில் இனம் 8-ல் உள்ள 327 உறுப்பினர்களும் தாங்கள் பெற்ற கடனை ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. (**பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது**) நான் அந்த சொசைட்டியில் பணிபுரிந்த காலகட்டத்தில் 327 படங்களில் எத்தனை கடன்கள் தண்ட வசூலுக்காக தீர்ப்பு பிறப்பித்துள்ளேன் என்றால் நான் எந்த கடனுக்கும் தீர்ப்பு செய்யவில்லை. 327 உறுப்பினர்களும் முன் கடன் பைசல் செய்யப்பட்டது என்பதை விசாரணை செய்து நான் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி முன் கடன் பரிசீலனை செய்யப்பட்டதா இல்லையா என்பதை ஆவணங்கள் அடிப்படையில் முறையாக விசாரணை செய்திருந்தால் அவர்கள் முன் கடன் பெற்று விவரம் எனது அறிக்கையில் தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல. மறுக்கப்பட்ட கடனுக்கு முன்னர் பெற்ற கடன் பரிசில் செய்யப்பட்ட விபரம் அக்கடனுக்குள்ள உறுப்பினர் கையொப்பம் ஆகியவற்றை குறித்து சரியான முறையில் புலனாய்வு செய்யாமல் ஒரு தவறான அறிக்கையை சமர்ப்பித்துள்ளேன் என்றால் சரியல்ல, வாக்குமூலம் பெறப்பட்டது.

3. எனது விசாரணையில் இனம் 8-ல் உள்ள உறுப்பினர்கள் தங்களது கடனை முழுமையாக பைசல் செய்த பின்பு என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல, அதற்குப் பின்பு அவர்களுக்கு தெரியாமல் இந்த கடன் பெறப்பட்டுள்ளது. மேற்படி 327 நபர்களும் பிரம்மதேசம் கூட்டுறவு வேளாண்மை வங்கியில் உறுப்பினராக இருந்து கடன் பெற்றுள்ளார்கள் என்றால் அவர்கள் உறுப்பினராக உள்ளார்கள் ஆனால் கடன் பெறவில்லை அவர்களுக்கு தெரியாமல் கடன் பெறப்பட்டுள்ளது. எனது அறிக்கையில் கடனை முழுமையாக பரிசில் செய்து விட்டார்கள் என்று குறிப்பிட்டுவிட்டு தற்பொழுது முன்னுக்கு பின் முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி 327 நபர்களும் ஏற்கனவே பிரம்மதேசம் கூட்டுறவு வங்கியில் உறுப்பினராக இருந்தவர்கள் என்றால் சரிதான். விழுப்புரம் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கியில் இருந்து பணம் பட்டுவாடா செய்வது சங்கத்தின் செயலாளர் தான் என்றால் சரிதான். உறுப்பினர்களிடம் இருந்து பெற்ற வாக்குமூலத்தில் முன் கடன் பைசல் செய்யப்பட்டது என்பதை ஏற்றுக் கொண்ட நான் கடைசியாக

பைசல் செய்யப்பட்ட கடன் விபரத்தை கேட்டறிந்து வாக்குமூலம் பெறாமல் இவர்களை தெரிவித்ததாக நானாகவே கற்பனையாக அறிக்கையை சமர்ப்பித்துள்ளேன் என்றால் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளது.

4. எப்பொழுது கடன் கடைசியாக பைசல் செய்யப்பட்டது என்பதை எனது விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அது தேவையில்லை. மேற்படி 327 நபர்களை தாங்கள் பெற்ற கடன்களை வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டு இருந்தபோதிலும் அதை மறுத்து இந்த இனத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி 327 வாக்குமூலம் பெற்றதாக எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் ஆனால் 163 உறுப்பினர்களிடமிருந்து தான் நான் வாக்குமூலம் பெற்றுள்ளேன் என்றால் அனைத்து உறுப்பினர்களின் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் முடிவு செய்துள்ளேன். மீதம் உள்ள உறுப்பினர்களுக்கு நானாகவே தன்னிச்சையாக வாக்குமூலம் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 25.05.2001ல் தனி அலுவலர் காலம் துவங்குவதற்கு முன்பு வழங்கப்பட்ட 66 கடன்களுக்கு யார் பொறுப்பு என்று கூறாமலே அவர்களை வேண்டுமென்றே மறைத்து தனி அலுவலர்தான் பொறுப்பு என்று எனது அறிக்கையில் சமர்ப்பித்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. எனது விசாரணை அறிக்கைகள் 1991 முதல் 24.05.2001 வரை உள்ள காலத்திற்கு யார் யார் பொறுப்பு என்று தெரிந்து அவர்களை காப்பாற்றும் நோக்கத்தோடு மறைத்து எனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது விசாரணை காலம் 1993 முதல் 2004 வரை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எனது அறிக்கைகள் முறைகேடு நடைபெற்றிருந்தால் அந்த காலகட்டத்தில் உள்ள நபர்களை எனது அறிக்கையில் குறிப்பிட்டு இருப்பேன் என்றால் குறிப்பிட்டு அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நான் சொல்வது போல் எந்த நபர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல, துறை அலுவலர்கள் 2 நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனது விசாரணை அறிக்கையில் மேற்சொன்ன நடவடிக்கை எடுத்த விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் குற்றவியல் நடவடிக்கைக்கான அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை, ஒழுங்கு நடவடிக்கை அறிக்கை தனியாக சமர்ப்பித்துள்ளேன். வரிசை எண்.146 உறுப்பினரின் 876 தாமோதரன் 749

தேதி 27.06.2003 அன்று கடன் தொகை ரூபாய் 70 ஆயிரம் என்று உள்ளது ஆனால் அந்த கடந்தாரரிடம் வாக்குமூலம் 25.02.2005 இல் வாக்குமூலம் பெற்ற பொழுது கடன் பேரேட்டை காட்டி வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் அது வரிசை எண் 147 ஆகும். கடன் பேரேட்டை காட்டி வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரிதான், தினப்பரேட்டை காண்பித்து வாக்குமூலம் பெறப்பட்டது. கடன் பேரேட்டை காட்டி வாக்குமூலம் பெற்றிருந்தால் 18.11.2004 இல் கடன் வசூல் ஆகியுள்ள விவரம் எனக்கு தெரிய வந்திருக்கும் செஞ்சாலும் அதன் காரணமாக தான் எனது விசாரணை அறிக்கையில் நான் தவறுதலாக சுட்டிக்காட்டி உள்ளேன் என்றாலும் சரியல்ல. மேற்படி விவரம் கடன் வசூல் பட்டியலில் வரிசை எண் 81 விவரம் உள்ளது என்றால் சரியல்ல.

6. கூட்டுறவு சங்கங்களின் சட்டம் பிரிவு 81 விசாரணை காலமான ஒன்னு ஒன்னு 01.01.1993 முதல் 30.11.2004 வரை உள்ள காலம் என்று தெரிவித்த நான் 31 10 2004 தேதியில் கடன் நிலுவைப் பட்டியல் தயார் செய்யவில்லை என்றால் தயாரித்து விசாரணையா அறிக்கையில் பக்கம் 6 முதல் 107 வரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்னது நான் தன்னிச்சையாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளது என்றால் சரியல்ல. 31.10.2004-ல் நான் சொல்வது போல் கடன் நிலுவை பட்டியல் தயாரித்தது உண்மை என்றால் கீழ்க்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள தேதி எவ்வாறு 31.10.2004-ல் கடன் நிலுவை பட்டியல் வேண்டுமென்றே சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. (**பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது**) வரிசை எண் 278 உறுப்பினர் எண் 894 ராஜாராம் கடன் எண் 966 நாள் 27.06.2004 கடன் தொகை ரூபாய் 35 ஆயிரம் என்று உள்ளது 25.05 2005 தேதியில் அளித்த வாக்கு மூலத்தில் நான் ஒரு நிர்வாக குழு உறுப்பினராக 1996 முதல் 2001 வரை இருந்த காலத்தில் நிர்வாக குழு உறுப்பினராக இருந்ததாகவும் கடன் எண் 966-ஐ குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரியில்ல. நானாகவே வாக்குமூலத்தை பெறாமல் மறுக்கப்பட்ட கடன் என்று தவறுதலாக சுட்டிக்காட்டி உள்ளேன் என்றால் சரியல்ல.

7. எனது அறிக்கையில் சொல்லி உள்ளபடி தனி அலுவலர் எந்த தீர்மானமும் போடவில்லை என்றாலும் அதில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் காசோலையில் கையொப்பம் இடப்பட்டுள்ளது. எனது விசாரணை அறிக்கையில் காசோலையில் கையொப்பம் செய்ததாக எந்த இடத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் பட்டுவாடா என்று பொதுவாக குறிப்பிட்டுள்ளேன்.

நான் சொல்லும் பட்டுவாடா என்ற கையெழுத்து தனி அலுவலருக்கு தெரியாமலேயே செயலாளர் போட வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. தமிழ் அலுவலர் மொத்தம் ஒன்பது சொசைட்டியில் கூடுதலாக பணியில் இருந்ததால் அவருக்கு தெரியாமலேயே சங்கு செயல்லாளர் தீர்மானத்தில் கையெழுத்து போட்டு பட்டுவாடா செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் எனது விசாரணை அறிக்கைகள் சொன்னது போல இந்த கடன்கள் பினாமி கடன்கள் இல்லை என்றாலும் அவர்களுக்கு தெரிந்து அவர்கள் தான் ஆவணங்களை கொடுத்து கடன் வாங்கிவிட்டு தற்பொழுது கடனை கட்ட சொல்வதால் அவர்கள் முடியாது என்று சொல்லி மறுக்கிறார்கள் என்றால் சரியல்ல.

8. தனி அலுவலர் என் மீது குற்றவியல் வழக்கு தாக்கல் செய்த காரணத்தினால் அவரை பழிவாங்க வேண்டும் என்பதற்காக வேண்டுமென்று இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. தீர்மானத்தை சங்க செயலாளர் தானாகவே தயார் செய்து கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த 327 கடன்களும் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து உறுப்பினர்களால் பெறப்பட்டது என்றாலும் அந்த கடன்கள் தேர்தல் நேரத்தில் தள்ளுபடி ஆகிவிடும் என்ற நம்பிக்கையில் உறுப்பினர்கள் கடன்களை பெற்றுவிட்டு தற்பொழுது திருப்பி செலுத்த சொல்வதால் மறுக்கிறார்கள் என்றாலும் சரியல்ல. நான் சரியான முறையில் 100 சதவீத கடன் சரிபார்ப்பு குழுவை விசாரணை செய்திருந்தால் அவர்கள் பெற்ற கடன் பற்றி உண்மை விவரம் தெரிய வந்திருக்கும் என்றால் யாரும் கையொப்பமிடவில்லை. 100% சரிபார்க்க குழுவில் 327 நபர்களும் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றாலும் அதை பொறுத்து ஆவணங்கள் உள்ளது என்றாலும் சரியல்ல. மேற்படி 327 நபர்களின் கையொப்பங்களையும் கடன் மனுவில் உள்ள கையொப்பங்களையும் ஒப்பிட்டு சரிபார்த்தேனா என்றால் தேவை ஏற்படவில்லை. அவ்வாறு ஒப்பிட்டு சரிபார்த்திருந்தால் அந்த 327 நபர்களும் அவர்களுக்கு தெரிந்தே தான் கடன் வாங்கி உள்ளார்கள் என்ற விவரம் தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல.

<u>மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டு **2** முதல் **8, 12,13** எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**.**</u>

9. எனது விசாரணை காலம் எந்த தேதியில் ஆரம்பித்து எந்த தேதியில் முடிக்கப்பட்டது என்றால் 04.01.2005 ஆரம்பிக்கப்பட்டு 01.04.2005-ல் முடிக்கப்பட்டது. அனைத்து எதிரிகளுக்கும் அழைப்பானை அனுப்பப்பட்டு அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டதா என்றால் வாக்குமூலம் பெறப்பட்டது. அவர்களின் விளக்கத்தினை பரிசீலனை செய்து இந்த விசாரணை அறிக்கை தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். அங்கத்தினரால் மறுக்கப்பட்ட 327 உறுப்பினர்களின் பெயர் மற்றும் விலாசத்தை குறிப்பிட்டுள்ளேன் என்றால் அதை குறிப்பிடதற்கான தேவை இல்லை. மேற்படி 327 நபர்களும் ஏற்கனவே சங்கத்தில் உறுப்பினராக இருந்தவர்கள் தான் என்றாலும் வருட வருடம் கடன் வாங்குபவர்கள் என்றாலும் சரிதான். முறைகேடுகாலத்தில் சங்கங்களை கண்காணிக்கும் பொறுப்பு யாருடையது என்றால் தலைவர் மற்றும் தனி அலுவலர் ஆவார்கள்.

10. ஒவ்வொரு தீர்மானம் நிறைவேறும் பொழுது தனி அலுவலர் முன்னிலையில் நிறைவேற்றப்படும் என்றால் சரிதான். தலைவர் இல்லாமலேயே காசோலையில் கையொப்பம் செய்து தனி அலுவலர் பணத்தைப் பட்டுவாடா செய்யலாம் என்றால் செயலாளர் மற்றும் தனி அலுவலர் கையொப்பம் செய்வார்கள். தீர்மானம் இல்லாமலேயே பணம் பட்டுவாடா செயலாளர் மற்றும் தனி அலுவலர் செய்யலாம் என்றால் செய்ய முடியாது. ஒவ்வொரு தீர்மானத்திற்கும் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்தால்தான் தீர்மானம் நிறைவேற்ற முடியும் என்றால் தனி அலுவலர் காலத்திற்கு அது பொருந்தாது. தீர்மானத்தில் தனி அலுவலர் மட்டும் தான் கையப்பம் செய்வார். சங்கத்துணை விதிகளை நிர்ணயிப்பது யார் என்றால் தனி அலுவலர் அல்லது நிர்வாக குழு நிர்ணயம் செய்வார்கள். சங்க நிர்வாக எல்லையை யார் நிர்ணயம் செய்வார்கள் என்றால் தலைவர் இல்லாத காலகட்டத்தில் தனி அலுவலர் நிர்ணயம் செய்வார். சங்கத்திற்கான தேர்தல் நடத்துவது யார் என்றால் துணைப்பதிவாளர் ஆவார். தணிக்கை அதிகாரி நியமனம் செய்வது யார் என்றால் உதவி இயக்குனர். சங்கத்தில் தணிக்கை அறிக்கையை தயார் செய்து யாரிடம் ஒப்படைப்பார்கள் என்றால் உதவி இயக்குனர், விழுப்புரம் அவர்களிடம் ஒப்படைப்பார்கள். அதற்கு ஒப்புதல் அளிப்பது யார் என்றால் இயக்குனர் ஆவார்.

11. சங்கத்தின் மீது உறுப்பினர்களோ பணியாளர்களும் புகார் அளித்தால் அதன் மீது யார் விசாரணை செய்வார்கள் என்றால் சரக துணைப்பதிவாளர் நியமிக்க கூடிய ஒரு அதிகாரி விசாரணை மேற்கொள்வார். முறைகேடு காலமான 1993 முதல் 2004 ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கையில் எந்த குறைபாடும் இல்லாமல் இருக்கும் பொழுது நான் மட்டும் எவ்வாறு குறை கண்டுபிடித்தேன் என்றால் ஆவணங்கள் மற்றும் விசாரணை அடிப்படையில் கண்டுபிடித்தல். சங்க செயலாளர் மற்றும் பணியாளர் மீது பணிநீக்கம் மற்றும் பணி நியமனம் ஆகியவற்றை யார் செய்வார்கள் என்றால் நிர்வாக குழு அல்லது தனி அலுவலர். சங்கத்தை கலைக்க வேண்டும் என்றால் யார் முடிவு செய்வார்கள் என்றால் சரக துணைப்பதிவாளர் அவர்கள். சங்கத்தை 6 மாதத்திற்கு ஒரு முறை பார்த்துவிட்டு அறிக்கை தாக்கல் செய்வதற்கு அதிகாரியை நியமனம் செய்வது யார் என்றால் கூட்டுறவு விரிவாக்க அலுவலர். அவர் ஒவ்வொரு ஆறு மாத காலத்திலும் கூட்டுறவு சங்கத்தை தணிக்கை செய்து அறிக்கை துணைப் பதிவுளரிடம் தாக்கல் செய்வார் என்றால் சரிதான்.

12. இந்த முறைகேடு குறித்து அந்த அதிகாரி மீது நான் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் துறை ஒழுங்கு நடவடிக்கை பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. முறைகேடு காலமான 1993 முதல் 2004 ஆம் ஆண்டு வரை கூட்டுறவு உயர் அதிகாரிகள் சங்கங்களை ஒவ்வொரு நிதி ஆண்டும் கண்காணித்து வந்தார்கள் என்றாலும் மேற்படி நபர்களை இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல, சேர்த்துள்ளேன். ஒவ்வொரு காசோலையிலும் கையொப்பம் செய்து பணம் பட்டுவாடா செய்வது செயலாளர் மற்றும் தனி அலுவலர் என்றால் சரிதான். மேற்படி 327 உறுப்பினர்களும் அரசாங்கத்தால் கடன் தள்ளுபடி ஆகிவிடும் என்று கடனை திரும்ப செலுத்தாமல் இருந்துவிட்டு பின்னிட்டு கடனை திரும்ப செலுத்து கேட்ட பொழுது அவர்கள் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக சங்க ஊழியர்கள் மீதும் சங்க அதிகாரிகள் மீதும் தவறான வாக்குமூலத்தை என்னிடம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அவர்களுக்கு முறையான ஆவணங்கள் அடிப்படையில் தான் கூட்டுறவு சங்கத்தில் இருந்து கடன் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் நேரடியாக சென்று எந்த உறுப்பினரையும் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் நேரடியாக சங்கத்திற்கு சென்று விசாரணை செய்தேன்.

13. அந்த நபர்களை நான் அழைப்பானை அனுப்பி விசாரிக்கவில்லை என்றாலும் ஆவணங்கள் அடிப்படையில் தான் தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்லி உள்ள முறைகேடானது ஏற்கனவே தணிக்கை செய்த அதிகாரிகளால் கண்டுபிடிக்க இயலாத பொழுது நான் வேண்டுமென்று எதிரிகளுக்கு எதிராக செயல்பட்டு உள்ளேன் என்றால் கண்டுபிடிக்க தவறிய அந்த அதிகாரி மீது குற்றவியல் நடவடிக்கை பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனது விசாரணை காலத்திற்கு பின்னிட்டு அந்தத் தொகை அனைத்தும் கூட்டுறவு சங்கத்தால் வசூல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணங்களில் ஊழியர்கள் எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றாலும் அது அவர்களுடைய கையொப்பம் இல்லை என்றாலும் அந்த கையொப்பங்கள் அனைத்தும் செயலாளரால் போலியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. இந்த முறை கேட்டிற்கு நான் தலைவர் மீதும் வட்ட கல ஆய்வாளர் மீதும் ஆய்வாளர் மீதும், நான் நடவடிக்கை எடுத்தது தவறு என்றாலும் அவர்களுக்கும் இந்த முறை கேட்டிருக்கும் சம்பந்தமில்லை என்றாலும் இந்த முறை கேட்டிற்கு முழுக்க முழுக்க செயலாளர் தான் காரணம் என்றாலும் சரியல்ல.

//திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் மைக் மூலம் சொல்லப்பட்டு கணினியில் பதிவுசெய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டினம்.